மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பொன்னமராவதி.

**முன்னிலை : திரு.C.பழனிவேல்ராஜன், M.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், பொன்னமராவதி.
2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம்-07 ஆம் நாள் செவ்வாய்கிழமை
**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 102/2026**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
பொன்னமராவதி காவல்நிலையம்,
குற்ற எண். 169/2025. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

சுந்தரம், (வயது 58/2026)
த/பெ. ராமையா. ..... எதிரி

*****

இவ்வழக்கு 21.05.2026 அன்று பொன்னமராவதி நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துரை உதவி வழக்குரைஞர் நிலை - I அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் செல்வி. PL.சுந்தாயி, அவர்கள் முன்னிலையாகியும், சாட்சிகளின் சாட்சியங்களையும், ஆவணங்களையும் பரிசீலித்தும், வாதுரைகளை கேட்டும், இறுதியாக 22.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

1). கடந்த 27.10.2025 ஆம் தேதி 16.00 மணிக்கு பொன்னமராவதி, கேசராப்பட்டி அரசு மதுபான கடை பின்புறம் உள்ள கருவை மரத்தின் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரி சுந்தரம் என்பவர் எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ, இல்லாமல் 180 ML கொள்ளளவு கொண்ட Vorion Brandy Bottle-35 Nos, பாட்டில்களை விற்கும் நோக்கத்தில் விற்பனைக்காக வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார் என்று எதிரி மீது பிரிவுகள் 4(1)(C) TNP (amendment) Act 2024 -ன் கீழ் அரசுத் தரப்பில் குற்ற வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

2). எதிரி ஆஜரானவுடன் அரசு தரப்பு அனைத்து ஆவணங்களின் நகல்களும் எதிரிக்கு 230 BNSS பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3). போதிய கால அவகாசத்திற்கு பின், இருதரப்பும் கேட்கப்பட்டு, கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிரி மீது முகாந்திரம் எழுந்ததால், எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனைந்து வினவ, எதிரி குற்றவாளி இல்லை என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4). அரசு தரப்பில் அ.சா.1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5). அரசு தரப்பு வழக்கின் சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு:**

5.1) அ.சா.1 வரதராஜன் தான் தற்போது பொன்னமராவதி காவல் நிலையத்தில் 2ம் நிலைக்காவலராக பணிபுரிகிறேன் என்றும், கடந்த 27.10.2025 ஆம் தேதி 14.00 மணிக்கு தானும், விக்னேஷ் 2ம் நிலை காவலரும் மற்றும் உதவி ஆய்வாளர் பூவரசனும் சேர்ந்து பொன்னமராவதிக்கு உட்பட்ட பகுதிகளில் மது, குட்கா, லாட்டரி போன்ற குற்றங்களை தடுக்கும் வண்ணம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது ரகசிய தகவலின் பேரில் 16.00 மணிக்கு கேசராப்பட்டி அரசு மதுபான கடை அருகே கண்காணித்தபோது அங்கு இருந்த எதிரியை விசாரித்தபோது முன்னுக்கு பின்னாக கூறி அவர் பெயர் மற்றும் முகவரியை தெரிவித்தார் என்றும், அவரை பரிசோதித்த போது vorion brandy bottle என்ற லேபில் ஒட்டிய 180 ML பிடிக்கக்கூடிய 35 பிராந்தி பாட்டில்களை, அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி விற்பனைக்கு வைத்திருந்தார் என்றும், எனவே, அவரை 16.00 மணிக்கு குற்றக்காரணம் கூறி கைது செய்து வேறு சாட்சிகள் முன்வராததால் தான் மற்றும் தன்னுடன் இருந்த விக்னேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் 16.15 மணிக்கு உதவி ஆய்வாளர் கைபற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும் தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் தங்கள்

முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றியது தான் என்றும் அதில் உள்ள 1ஆவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் உள்ள விவரங்கள் தெரியும் என்றும் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆகும் என்றும் பின்பு எதிரியுடனும், வழக்கு சொத்துகளுடனும் 16.30 மணிக்கு நிலையம் வந்தோம் என்றும், உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும், பின்பு வழக்கு சொத்துக்களான பாட்டில்களை உள்ள திரவத்துடன் தனது மற்றும் இரண்டாம் நிலை காவலர் விக்னேஷ் முன்னிலையில் பொன்னமராவதி காவல் நிலையத்தில் வைத்து 29.10.2025 அன்று உதவி ஆய்வாளர் அழித்தார் என்றும் அழித்தல் மகஜரில் தானும், இரண்டாம் நிலை காவலர் விக்னேஷ், சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் தன்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1ஆவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும் அழித்தல் மகஜரில் உள்ள விவரங்கள் தெரியும் என்றும் அழித்தல் மகஜர் அ.சா.ஆ.2 ஆகும் என்றும் உதவி ஆய்வாளர் தன்னை விசாரிக்க நடந்த விவரம் கூறினேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.2) அ.சா.2 வீரமுத்து தான் தற்போது பொன்னமராவதி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும் இதற்கு முன்பு பொன்னமராவதி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய பூவரசன் என்பவரது கையொப்பமும், கையெழுத்தும் தனக்கு நன்கு தெரியும் என்றும் எனவே தான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் கடந்த 27.10.2025 ஆம் தேதி பொன்னமராவதி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக இருந்தபோது அன்றைய தினம் 14.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் 2ம் நிலைக்காவலர் வரதராஜன் மற்றும் இரண்டாம் நிலை காவலர்கள் விக்னேஷ் ஆகியோர்களுடன் சேர்ந்து பொன்னமராவதிக்கு உட்பட்ட பகுதிகளில் மது, குட்கா, லாட்டரி போன்ற குற்றங்களை தடுக்கும் வண்ணம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது ரகசிய தகவலின் பேரில் 16.00 மணிக்கு கேசராபட்டி அரசு மதுபான கடை அருகே கண்காணித்தபோது அங்கு இருந்த

எதிரியை விசாரித்தபோது முன்னுக்கு பின்னாக கூறி அவர் பெயர் மற்றும் முகவரியை தெரிவித்தார் என்றும், அவரை பரிசோதித்தபோது vorion brandy bottle என்ற லேபில் ஒட்டிய 180 ML பிடிக்கக்கூடிய 35 பிராந்தி பாட்டில்களை அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி விற்பனைக்கு வைத்திருந்தார் என்றும், எனவே, அவரை 16.00 மணிக்கு குற்றக்காரணம் கூறி கைது செய்து வேறு சாட்சிகள் முன்வராததால் காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் அவர்களுடன் இருந்த 2ம் நிலைக்காவலர் விக்னேஷ் மற்றும் இரண்டாம் நிலை காவலர்கள் வரதராஜன் முன்னிலையில் 16.15 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் கைபற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் கைப்பற்றியது தான் என்றும் பின்பு எதிரியுடனும், வழக்கு சொத்துகளுடனும் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 169/2025 சட்டபிரிவு 4(1)(C)TNP Amendment Act ன் படி வழக்கு பதிவு செய்தார் என்றும், எதிரியை நிலைய பிணையில் விடுவித்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை அசல் அ.சா.ஆ.3 ஆகும் என்றும், பின்பு வழக்கு சொத்தான பாட்டில்களை பொன்னமராவதி காவல் நிலையம் அருகே வைத்து 2ம் நிலைக்காவலர் விக்னேஷ் மற்றும் இரண்டாம் நிலை காவலர்கள் வரதராஜன் முன்னிலையில் அழித்தல் மகஜரில் அழித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜர் அ.சா.ஆ.2 காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் தயார் செய்தது தான் என்றும், தடய சொத்துக்கள் அழிக்கப்பட்டதால் நீதிமன்றத்திற்கு அனுப்பபடவில்லை என்றும், பின்பு சாட்சிகளை புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக சட்டபிரிவு 4(1)(C)TNP Amendment Act ன் கீழ் இறுதி அறிக்கையை காவல் உதவி ஆய்வாளர் பூவரசன் தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6). அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறியதால், தகுந்த வாய்ப்பிற்கு பிறகு எதிரி தரப்பு

சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7). இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்:**

எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act–ன், குற்றம் எதிரி புரிந்தாரா? என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8) அரசு தரப்பு குற்றவியல் வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு வழக்கு போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது இது பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றும், அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என வாதிட்டார். இருதரப்பும் கேட்டப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**9). தீர்வு:**

9.1) கடந்த 27.10.2026 ஆம் தேதி 16.00 மணிக்கு பொன்னமராவதி, கேசராப்பட்டி அரசு மதுபான கடை பின்புறம் உள்ள கருவை மரத்தின் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரி சுந்தரம் என்பவர் எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ, இல்லாமல் 180 ML கொள்ளளவு கொண்ட Vorion Brandy Bottle–35 Nos, பாட்டில்களை விற்கும் நோக்கத்தில் விற்பனைக்காக வைத்திருந்தார் என்பது ஆகும்.

9.2) அ.சா.1 ஆக இரண்டாம்நிலைக் காவலர் வரதராஜன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் எதிரி சுமார் 35 பிராந்தி பாட்டில்களை அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி விற்பனைக்கு வைத்திருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்குபடி 16.00 மணிக்கு எதிரியை கைது செய்தும் 16.15 மணிக்கு பிராந்தி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்பது ஆகும். பின்பு 16.30 மணிக்கு நிலையம் சென்று எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பது ஆகும். கைப்பற்றுதல் மகஜரை பார்க்கும் போது கைப்பற்றுதல் மகஜரிலேயே குற்ற பிரிவு எண் மற்றும் நேரம், முதல் தகவல் அறிக்கை எண் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. 16.15 மணிக்கு கைப்பற்றிவிட்டு, 16.30 மணிக்கு நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கை பதியும் பொழுது 16.15 மணிக்கே

கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் முதல் தகவல் அறிக்கை எண் பிரிவு, நேரம் போன்றவை எவ்வாறு வரமுடியும். எனவே, கைப்பற்றுதல் மகஜரே சந்தேகத்திற்கு உள்ளாகிறது.

9.3) மேலும், கேசராப்பட்டி அரசு மதுபான கடை பின்புறம் உள்ள கருவை மரத்தின் அருகே கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதாக சொல்கையில் கைப்பற்றுதல் மகஜர் கணினி மூலம் தட்டச்சு செய்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அது எவ்வாறு செய்ய முடியும் என்பது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது. அரசு தரப்பு ஆவணமான அ.சா.ஆ.2ல் அழித்தல் மகஜரில் 29.10.2026ம் தேதி 10.00 மணிக்கு பாட்டில் மற்றும் திரவங்கள் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், முதல் தகவல் அறிக்கையில் 27.10.2026 அன்று 16.00 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அழித்தல் மகஜருடன் போட்டோ எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 27.10.2026 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிவிட்டு 29.10.2026ம் தேதி காலை 10.00 மணிக்கு தான் அழித்தாக சொல்லும் பொழுது காவல் நிலையத்திற்கு வந்து 3 நாட்கள் கழித்து தான் அழிக்கப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியம் அதே காவலர்கள் சாட்சிகளின் முன்னிலையில் அழித்ததாக சொல்வது நம்பக்கூடியதாக இல்லை. 3 நாட்கள் கழித்து அழித்ததாக சொல்லும் போது மற்ற பொது சாட்சிகளின் முன்னிலையில் அழிக்காதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அழித்தல் மகஜர் அ.சா.ஆ.2 சந்தேகத்திற்கு உட்படுகிறது. மேலும், அரசு தரப்பில் பாட்டில்களில் உள்ள திரவத்தை பரிசோதனைக்கு அனுப்பி அதில் Atropin, Ethin alcohol, Arrack போன்றவை உள்ளதா என்பதை அறிய எவ்வித முயற்சியும், செய்யவில்லை. எனவே, மேற்கண்ட காரணங்கள் அனைத்துமே அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது.

9.4) எனவே, மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் பார்க்கும் பொழுது, அரசுத்தரப்பு வழக்கை உறுதியூட்டும் வண்ணம் சாட்சிகள் இல்லாததாலும், அரசுத்தரப்பு வழக்கின் மீது சந்தேகம் எழுவதாலும், எதிரி மீது பிரிவு 4 (1)(C) TNP Amendment Act–ன்

கீழ் வனையப்பட்ட குற்றசாட்டு அரசுத்தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்வு காண்கின்றேன்.

9.5) இறுதியாக, எதிரி மீது பிரிவு 4 (1)(C) TNP (Amendment) Act 2024–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்று பொருள் இல்லை.

இந்த தீர்ப்புரை முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜீலை மாதம் செவ்வாய்கிழமை 07–ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C PALANIVELRAJAN Digitally signed by C PALANIVELRAJAN Date: 2026.07.07 19:47:09 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Ponnamaravathy.

**1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்:**

| S.No | Prosecution witness No. | Name of the witness | Description |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. வரதராஜன் | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 2. | அ.சா.2 | திரு. வீரமுத்து | காவல் உதவி ஆய்வாளர் |

**2). அரசு தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்:**

| S.No | Exhibit No. | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜர் | PW1 |
| 2. | அ.சா.ஆ.2 | அழித்தல் மகஜர் | PW1 |

| | | | |
|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | PW2 |

**3). அரசுத் தரப்பு சான்று பொருள்**: இல்லை

**4). எதிரி தரப்பு சாட்சிகள், சான்று பொருள்கள்**: தாக்கல் இல்லை.

**5). எதிரிகள் தரப்பு சான்றாவணம் :** இல்லை

C PALANIVELRAJAN

Digitally signed by C PALANIVELRAJAN
Date: 2026.07.07 19:47:20 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Ponnamaravathy.

**குறிப்பு**:

1. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது,
2. எந்த சாட்சியும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை,
3. விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்து முன்னிலையானார்.

Judicial Form No.61
*(See Rule 106 of Criminal Rules of Practice, 2019)*
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
PONNAMARAVATHY
**C.C.No. 102/2026**

| | |
|---|---|
| Complainant | The State Represented through<br>The Sub Inspector of Police,<br>Ponnamaravathy Police Station in Cr.No. 169/2025. |
| Accused | Sundaram, S/o. Ramaiya |
| Offence | U/s. 4 (1)(C) TNP amendment Act 2024 |
| Finding | Accused found not guilty u/s. 4 (1)(C) TNP amendment Act 2024. Hence, Acquitted u/s.271(1) of BNSS. |
| Sentence | இறுதியாக, எதிரி மீது பிரிவு 4 (1)(C) TNP amendment Act 2024–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்று பொருள் இல்லை. |

| Sl. No | *Description of Accused* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father/ Husband's Name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Sundaram | Ramaiya | - | - | Muralikalam Nerkuppai, Thiruppathur Taluk, Sivagangai | 58/26 |

| *Date of* | | | | | | | *Explanation of delay* |
|---|---|---|---|---|---|---|---|
| *Occurrence* | *Complaint* | *Apprehension or appearance* | *Released on bail* | *Commencement of trial* | *Close of trial* | *Sentence or Order* | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 27.10.2025 | 27.10.2025 | Station Bail | Station Bail | 25.06.2026 | 25.06.2026 | 07.07.2026 | Nil |

C PALANIVELRAJAN Digitally signed by C PALANIVELRAJAN Date: 2026.07.07 19:47:32 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Ponnamaravathy.

CASE SUMMARY

(ROC.No.814/2020/RG/F1 – P.Dis.No.36/2021 Dated 07.04.2021 of Hon'ble Madras High Court)
IN THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, PONNAMARAVATHY

**C.C.No.102/2026**

<table>
<tr><td>01.</td><td>The Period of remand of the accused</td><td colspan="3">Station Bail</td></tr>
<tr><td>02.</td><td>The date of filing of the Complaint/Final Report of the Court</td><td colspan="3">29.10.2025</td></tr>
<tr><td>03.</td><td>The date of committal of the case to the Court Session</td><td colspan="3">Not Applicable.</td></tr>
<tr><td>04.</td><td>The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be</td><td colspan="3">01.06.2026</td></tr>
<tr><td>05.</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under Section 317 of the Code.</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td rowspan="3">06.</td><td rowspan="3">Date of examination in-chief and cross-examination of a witness.</td><td>PW's</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.06.2026</td><td>25.06.2026</td></tr>
<tr><td>PW2</td><td>25.06.2026</td><td>25.06.2026</td></tr>
<tr><td>07.</td><td>Date of examination of the accused under section 313 of the code;</td><td colspan="3">30.06.2026</td></tr>
<tr><td>08.</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and</td><td colspan="3">Nil.</td></tr>
<tr><td>09.</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td colspan="3">Nil.</td></tr>
</table>

C PALANIVELRAJAN

Digitally signed by C PALANIVELRAJAN
Date: 2026.07.07 19:47:24 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Ponnamaravathy.